தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 11-4-2017

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், தமிழ்நாடு வாழை உற்பத்தியாளர் கூட்டமைப்பு மற்றும் இத்தாலி நாட்டு டிரையஸ்டு துறைமுகத்துடன் ஒப்பந்தம்

கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மூலம் தமிழ்நாடு வாழை உற்பத்தியாளர் கூட்டமைப்புடன் இணைந்து தமிழகத்தில் முதன் முறையாக வாழைத்தார்களை வயல்வெளியில் அறுவடை செய்து கம்பி வடகடத்தி (Rope Conveyor) மூலம் சேதமில்லாமல் பாதுகாப்பாக சிப்பம் கட்டும் கூடங்களுக்கு கொண்டு சேர்க்கும் வண்ணம் உலகத்தரத்தில் நூதன கட்டமைப்பை (International Standard Banana Pack-House) அறிமுகப்படுத்த உள்ளது. இத்திட்டத்திற்காக ரூபாய் 99 இலட்சம் நிதியுதவியை இத்தாலி நாட்டில் உள்ள டிரையஸ்டு துறைமுக பொறுப்புக்கழகம் அளிக்க உள்ளது. இத்திட்டம் பச்சை வாழை பெருமளவு சாகுபடி செய்யும் தேனி மாவட்டத்தில் கம்பம் பள்ளத்தாக்கில் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இத்தாலி நாட்டு டிரையஸ்டு துறைமுகக்கழகத்தின் பொறுப்பாளர், கோயம்புத்தூர் வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. இராமசாமி அவர்கள், தமிழ்நாடு வாழை உற்பத்தியாளர் கூட்டமைப்பின் தலைவர் திரு. அ.ப. கருப்பையா அவர்கள் மற்றும் செயலாளர் திரு. க. அஜித்தன் ஆகியோர் கையெழுத்திட்டனர். சுமார் 6 மாத காலத்தில் கம்பி வடகடத்தி (Rope Conveyor) வடிவமைப்பு முன்மாதிரிகள் தயார் செய்யப்பட்டு வயல்வெளி பரிசோதனைகள் துவங்கும்.

அறுவடை செய்யப்படும் வாழைத்தார்கள் சிப்பம்கட்டி ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட உள்ளது. முன்மாதிரியான இத்திட்டத்தின் மூலம் அறுவடைக்கு பிந்தய சேதாரம் தவிர்க்கப்படுவது மட்டுமல்லாமல் வாழை சாகுபடியாளர்களின் நிகர வருமானம் அதிகரிக்கும் வாய்ப்புகள் உள்ளது. இத்தகவலை தமிழ்நாடு வாழை உற்பத்தியாளர் கூட்டமைப்பின் பொருளாளர் திரு. அ. சுப்பிரமணியன் அவர்கள் தெரிவித்தார்.

மக்கள் தொடர்பு அலுவலர்